# பத்திரிக்கை செய்தி

## <u>மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய கணக்கீட்டாளருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை</u>

புகார்தாரர் திரு.மனோகரன், தஞ்சாவூர் மாவட்டம், விளார் ரோடு, நாவலர் நகர் பகுதியில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய உறவினர் வாங்கிய வீட்டிற்கு ஏற்கனவே இருந்த மூன்று மின் இணைப்பிற்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டி விண்ணப்பித்திருந்தார். திருமதி.தேன்மொழி, கணக்கீட்டாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், இ.பி.காலனி, தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்து தர தனக்கு ரூ.4,500/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தஞ்சாவூர் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 20.07.2022 மேற்கொள்ளப்பட்டு திருமதி.தேன்மொழி புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.4,500/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 03.03.2025 அன்று திருமதி.தேன்மொழி, முன்னாள் கணக்கீட்டாளருக்கு 3ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.6,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.